# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு • ஜூன் 24, 2023

Weekly E-paper • June 24, 2023




## பெருவெடிப்பின் முதல் ஓசை!

சுப.வீரபாண்டியன்



### பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால்...?

பேராசிரியர் புருனோ சந்திரசேகர்



### ஆளுநர் பொய் பேசக்கூடாது!

தலையங்கம்



### மணிப்பூரை மறந்தார் அமெரிக்கா பறந்தார்

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு ● ஜூன் 24, 2023

Weekly E-paper ● June 24, 2023


# பெருவெடிப்பின் முதல் ஓசை!

**சுப.வீரபாண்டியன்**

சர்வாதிகாரத்தையும், பாசிசத்தையும் வீழ்த்துவது அத்தனை எளிதன்று, கடினம் தான்! ஆனாலும் அவற்றைக் காலம் வீழ்த்தியே தீரும்! வரலாறு முழுவதும் அப்படித்தான் நிகழ்ந்திருக்கிறது!



கடந்த 9 ஆண்டுகளாக இந்தியாவில் அப்படிப்பட்ட ஓர் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களின் அடிப்படை வேலைத் திட்டங்களாக, வரலாற்றைத் திரித்தல், மதவாதத்தை அரியணை ஏற்றுதல், சமூக நீதியைக் குலைத்தல், மாநிலங்களை அடிமைகளாக நடத்துதல், இந்தியாவின் பன்மைத்துவத்தை அழித்தல் ஆகியன இருக்கின்றன!

இந்த வேலைத் திட்டங்களை அவர்கள் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

பாடப்புத்தகங்களில் ஏற்கனவே பல வரலாற்றுத் திரிபுகள் அரங்கேறி விட்டன. மதவாதம் நாடெங்கும் தலைவிரித்து ஆடுகிறது. முன்னேறிய சாதியினருக்கும் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. காஷ்மீர் கலைக்கப்பட்டு விட்டது. ஒரே நாடு, ஒரே பண்பாடு, ஒரே மொழி, ஒரே மதம் என்னும் கூச்சல் ஒரேயடியாகக் கேட்கத் தொடங்கி இருக்கிறது!

இத்தருணத்தில்தான் இப்போது எதிர்க்கட்சிகள் விழித்துக் கொண்டிருக்கின்றன. சின்னச் சின்ன வேறுபாடுகள், அந்தந்த மாநிலங்களில் சில மோதல் போக்குகள், கொள்கைகளில் கூட ஒரு சில வேறுபாடுகள் எல்லாம் இருந்தாலும், இனி இந்த நாட்டையும், மக்களையும் காப்பாற்ற வேண்டுமானால், பாசிச பாஜக ஆட்சியை அகற்றுவது ஒன்றே வழி என்னும் புரிதலோடு, இந்தியாவில் உள்ள குறிப்பிடத்தக்க வலிமையான 16 கட்சிகள் இன்று பாட்னாவில் ஒன்று கூடி இருக்கிறார்கள்.

தங்களுக்குள் இருக்கும் சின்னச் சின்ன வேறுபாடுகளை எல்லாம் மறந்து, ஒரே அணியில் நின்று பாஜகவை வீழ்த்துவதே தங்கள் நோக்கம் என்று வெளிப்படையாக அனைவரும் அறிவித்திருக்கிறார்கள் பொது எதிரி யார் என்னும் புரிதலோடு, அந்தக் கூட்டத்தின் முடிவுகள் வெளிப்பட்டு இருக்கின்றன. மீண்டும் ஜூலை 10 அல்லது 12 சிம்லாவில் கூடுவது என்றும் முடிவெடுத்து இருக்கிறார்கள்.

முன் முயற்சி எடுத்து அந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கும் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! அதற்கு முழு ஒத்துழைப்பு தந்த அனைத்துக் கட்சியினரையும், குறிப்பாக, நம் தி.மு.கழகம் மற்றும் அதன் தலைவரையும் நாம் பாராட்டி மகிழ்கின்றோம்!

வரலாற்றுக் கடமை நம் முன்னால் காத்திருக்கிறது. ‘ஒரு பெருவெடிப்பின் முதல் ஓசை’ பாடலிபுத்திரத்தில் கேட்டிருக்கிறது.

இது வெறும் கட்சிகளின் கடமை மட்டுமின்றி, ஜனநாயகத்தைக் காப்பாற்ற நினைக்கும் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும் என்பதை உணர்ந்து, மக்களே அணி திரள்வோம்! பாசிசத்திற்கு விடை தருவோம்!! ●



# பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால்...?

**பேராசிரியர் புருனோ சந்திரசேகர்**

காட்டுத் தீயின் முதல் பொறி எங்கு தொடங்கியது என்று நமக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பொறி மிகப் பெரிய காட்டுத்தீயாய் வளரும் பொழுது நமக்கு ஏற்படும் பொருளாதார இழப்புகளும், உயிர் இழப்புகளும் மிகவும் பெரியது.

இன்று இந்தியாவில் பாசிசம் சிறு பொறியாய்த் தொடங்கி மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அழகிய மரங்களை எரிக்கும் காட்டுத் தீயைப் போல அழகிய ஜனநாயகத்தை இன்று பாசிசம் எரித்துக் கொண்டிருக்கின்றது.

குஜராத்தும், காஷ்மீரும், மணிப்பூரும் நம் கண்முன்னால் உள்ள நிகழ்கால எடுத்துக்காட்டுகள்.

இந்தியாவில், மாநிலங்கள் நிர்வாகப் பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டவை அல்ல.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பொழுது, அந்தந்த மாநிலங்கள் தனக்கான தனி கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் கொண்டிருக்கின்றன.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடு என்று சொல்லும் பாசிசம் அதை அனுமதிக்குமா?

நிர்வாக வசதிக்காக என்று சொல்லி மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட மாநிலங்களைச் சிறு சிறு துண்டுகளாக்கும்.

காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு, காஷ்மீர், லடாக் என்று பிரிக்கும்.

மணிப்பூர் பற்றி எரியும் பொழுது, ஓட்டு அரசியலுக்காக கர்நாடகாவில் நாடகங்களை நிகழ்த்தச் சொல்லும்.

தனித்த அடையாளத்தைக் கொண்ட தமிழ்நாட்டை என்ன செய்யலாம் என்று நடிகர்களைக் கொண்டும், சில மூத்த பத்திரிகையாளர்கள் என்று தன்னைத்தானே சொல்லிக் கொள்பவர்களை கொண்டும், ‘B’ டீம் கட்சிகளை கொண்டும் உள்ளே வரத் துடிதுடித்துக் கொண்டிருக்கும்.



> **“வந்தால் என்னவாகும்? நாம் நமது வரிப்பணத்தில் நமது மாநிலத்தில் கட்டிய மருத்துவக் கல்லூரிகளில் எல்லாம் வட மாநிலத்தவர் மருத்துவர் ஆவதற்காகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பார்கள்.**
>
> **குழந்தைத் திருமணம் சரிதான் என்றும், உடன்கட்டை ஏறுவது பெண்களுக்குப் புண்ணியம் என்றும் நமக்குப் பாடம் நடத்திக் கொண்டிருப்பார்கள்.**
>
> **நாம் நமது அடையாளத்தை இழக்க வேண்டியிருக்கும்.”**

வந்தால் என்னவாகும்? நாம் நமது வரிப்பணத்தில் நமது மாநிலத்தில் கட்டிய மருத்துவக் கல்லூரிகளில் எல்லாம் வட மாநிலத்தவர் மருத்துவர் ஆவதற்காகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பார்கள்.

குழந்தைத் திருமணம் சரிதான் என்றும், உடன்கட்டை ஏறுவது பெண்களுக்குப் புண்ணியம் என்றும் நமக்குப் பாடம் நடத்திக் கொண்டிருப்பார்கள்.

நாம் நமது அடையாளத்தை இழக்க வேண்டியிருக்கும்.

தற்பொழுதுதான் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட மக்கள், முதல் தலைமுறைப் பட்டதாரியாகப் படித்து அரசுப் பணிகளில் பணியாற்றி வருகின்றார்கள். அது இனி எட்டாக் கனியாகும்.

அதைத்தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் மிகச்சரியாகச் சொன்னார், “ பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ், தமிழ் மொழி, தமிழ்நாடு, தமிழ் கலாச்சாரம் அழிந்துவிடும்” என்று.

ஒரு சாதாரண குடிமகனாக நாம் என்ன செய்ய வேண்டும்?

பாசிசத்தை இந்தியாவின் நிலப்பரப்பிலிருந்து முற்றிலுமாக வேரறுக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுடைய நாம் ஜனநாயக வழியில் 2024 ஆம் ஆண்டுத் தேர்தலில் பாசிச பா.ஜ.கவை வீழ்த்தியே ஆகவேண்டும்.

●


தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநர் பொய் பேசக்கூடாது!

வடலூரில், வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் 200 ஆம் பிறந்த நாள் விழாவில் ஆளுநர் ரவி, வள்ளலார் 10,000 ஆண்டுகால சனாதன தர்மத்தின் உச்சநட்சத்திரம் என்று பேசியிருக்கிறார்.





வரலாற்று அறிவுள்ள எவரும் இப்படிப் பேச மாட்டார்கள். ஆரியர்கள், கைபர் - போலன் கணவாய்களின் வழியாக வட மேற்கில் சிந்து நதிப் பகுதிக்குள் வந்து நுழைந்து குடியேறியது கி.மு.1500 ஆம் ஆண்டில். அதாவது இப்போது 3500 ஆண்டுகள் ஆகின்றன.

பிறகெப்படி ஆரிய சனாதனம் இங்கே தோன்றியது 10,000 ஆண்டுகள் என்கிறார் ஆர்.என்.ரவி.

வள்ளலார் சனாதன தர்மத்தின் உச்ச நட்சத்திரமாம், சொல்கிறார் அவர்.

“சாதி சமயச் சழக்கை விட்டேன், அருட்சோதியைக் கண்டேனடி” என்று சனாதனத்தைக் கைவிட்டவர் வள்ளலார்.

தொழுவூர் வேலாயுத முதலியார் தியோசஃபிக்கல் சொசைட்டிக்கு அளித்த அறிக்கையில் வள்ளலாரின் கொள்கைகளை இவ்வாறு கூறுகிறார்,

“சாதி சமய வேற்றுமைகள் இறுதியில் ஒழிந்துபோம். அகில உலக சகோதரத்துவம் வரும். இந்தியாவில் அது நிலை நாட்டப்படும்”

இந்த இரண்டு சான்றுகள் போதும் வள்ளலார் சாதிசமய சனாதன தர்மத்தைத் தலைகீழாகத் தூக்கிப் போட்டார் என்பதற்கு.

ஒருமுறை சிதம்பரம் நடராசர் கோயிலுக்கு வழிபடச் சென்ற வள்ளலாரைச் சூத்திரர் என்று சொல்லிக் கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை தீட்சிதர்கள்.

இந்த சனாதனச் செருக்கைக் கண்ட அடிகளார், 1867ஆம் ஆண்டு சிதம்பரம் கோயிலுக்கு எதிராக வடலூரில் “சத்திய ஞான சபை”யை நிறுவினார். இன்று அது சமரச சன்மார்க்க நெறியாக வளர்ந்து இருக்கிறது.

இது சனாதனத்திற்கு வள்ளலார் கொடுத்த அடி அல்லவா?

இவையெல்லாம் தெரியாமல் ஆளுநர் அவர் வேலையைச் செய்யாமல், சனாதன அதர்மத்தைத் தூக்கிக் கொண்டும், பேசிக் கொண்டும் திரிவது ஆளுநருக்கு அழகில்லை, வேலையும் இல்லை.

ஆளுநர் ஆர்.என்.ரவி விரைவில் பதவி விலக வேண்டும்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சென்னை மாவட்டம் சார்பாகச் சென்னை அண்ணா அறிவகத்தில் 5 ஆம்அரசியல் பயிலரங்கம் 17-06-2023 அன்று நடைபெற்றது. கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குநர் ‘பெல்’ ராஜன் தொடக்க உரையைத் தொடர்ந்து பேராசிரியர் கருணானந்தன் , “ சனாதனத்தின் வரலாற்றுத் திரிபுகள்” என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய பின்னர் தோழர்களின் கேள்விக்கு விளக்கம் அளித்தார். நன்றி உரையுடன் பயிலரங்கம் நிறைவு பெற்றது.



கடலூர் மாவட்டம், நெய்வேலியில் “இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்” சார்பில் 18-06-2023 அன்று தொ.மு.ச. உள்ளரங்கத்தில் “திராவிடக்குரல்” மூன்று நூல்கள் அறிமுகக் கூட்ட நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர் சு.அறிவுக்கரசு, தோழர் ஆ.வந்தியத்தேவன், தோழர் கி.மதிவாணன் ஆகியோர் திராவிட இயக்க வரலாற்று ஆய்வுரைகளை நிகழ்த்தினார்கள். நன்றி உரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

# மணிப்பூரை மறந்தார் அமெரிக்கா பறந்தார்

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

மணிப்பூரில் மெய்தேய், பழங்குடியினரான குக்கி மற்றும் நாகா என மூன்று சமூகங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் வசிக்கின்றனர். குக்கி, நாகா உள்ளிட்ட பிற பழங்குடியின மக்கள் மலைப் பகுதிகளிலும், மெய்தேய் மக்கள் இம்பால் பள்ளத்தாக்கிலும் வாழ்கின்றனர். மெய்தேய்

சமூகத்தின் பெரும்பாலான மக்கள் இந்து மதத்தையும், நாகா மற்றும் குக்கி சமூகத்தினரில் பெரும்பாலானோர் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றி வருகின்றனர்.

மணிப்பூரின் மொத்தமுள்ள 60 எம்எல்ஏக்களில் 40 எம்எல்ஏக்கள் மெய்தேய் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மீதமுள்ள 20 பேர் நாகா மற்றும் குக்கி இனத்தைச் சேர்ந்தவர்கள். இதுவரை மணிப்பூரின் முதல்வராக இருந்துள்ள 12 பேரில் இருவர் மட்டுமே பழங்குடியினர். இவ்வாறு பெரும்பான்மை மக்கள் தொகை, அரசியல் செல்வாக்கு ஆகியவற்றின் மூலம் மணிப்பூரில் ஆதிக்கம் செலுத்தி வரும் மெய்தேய் சமூகத்திற்குப் பழங்குடியினர் அந்தஸ்து வழங்கப்பட்டதே இன்று அங்கு அமைதி குலைந்ததற்கான அடிப்படை.





மெய்தேய் மக்கள் பழங்குடி அந்தஸ்தைப் பெற்றால் தங்களுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்துவிடும் என்றும், மலைகளில் உள்ள தங்கள் நிலங்களை மெய்தேய் மக்கள் வாங்கத் தொடங்குவார்கள் என்றும், தாங்கள் மேலும் ஓரங்கட்டப்படுவோம் என்றும் எண்ணிய பழங்குடியினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 03.05.2023 அன்று நடத்திய பேரணியில் கலவரம் வெடித்தது. ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்கு மேலாகத் தொடரும் இந்தக் கலவரத்தைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசும், ஒன்றிய அரசும் படுதோல்வி அடைந்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு, 350க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ள இந்தக் கலவரத்தில் 4000 குடியிருப்புகள் சேதப்படுத்தப்பட்டு 50,000 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 250 தேவாலயங்களும், 1000 கோவில்களும் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பது, ஜாதி மோதலாகத் தொடங்கிய இந்தக் கலவரம் தற்போது மத மோதலாக உருமாறி இருப்பதையே காட்டுகிறது.

கலவரம் தொடர்பாக பழங்குடியினர் அமைப்பு உச்சநீதிமன்றத்தில் 20.06.2023 அன்று வழக்கைத் தாக்கல் செய்து “பழங்குடியினரின் இறுதி நம்பிக்கை உச்சநீதிமன்றம் மட்டும் தான்” என்று வாதிட்ட போது இதை அவசர வழக்காக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது. விடுமுறைக்கு பிறகு ஜூலை 3ஆம் தேதி இந்த வழக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

இம்பாலில் உள்ள ஒன்றிய இணையமைச்சர் ஆர்.கே.ரஞ்சன் சிங்கின் வீட்டுக்குத் தீ வைக்கப்பட்ட சூழலில், சம்பிரதாயப் பயணமாக மணிப்பூர் வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலவரத்தைக் கட்டுப்படுத்த எந்தப் பயனுள்ள நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. வெறுமனே 15 நாட்களில் மணிப்பூரில் அமைதி திரும்பும் என்ற அறிவிப்பை மட்டும் வெளியிட்டார். இரு தரப்புக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தும் பொறுப்பு அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வ சர்மாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதை மணிப்பூர் மக்கள் ஏற்கவில்லை.

மணிப்பூர் கவர்னர் அனுசுயா உய்கே தலைமையில் ஒன்றிய அரசு அமைத்த 51 பேர் கொண்ட அமைதிக் குழுவை குக்கி பழங்குடியினரின் உயரிய அமைப்பான குக்கி இம்பி, மெய்தேய் சமூகத்தை வழிநடத்தும் மணிப்பூர் ஒருமைப்பாட்டிற்கான ஒருங்கிணைப்புக் குழு போன்ற அமைப்புகள் நிராகரித்துள்ளன. “அரசால் அமைக்கப்பட்ட இந்த அமைதிக் குழுவில் சொந்த விருப்பத்தின் பேரில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவில் மணிப்பூர் மற்றும் இந்தப் பகுதியின் நிலவரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் கூட இல்லை. மாநிலத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளும் நபர்கள் குழுவில் இருந்திருக்க வேண்டும். எனவே இதிலிருந்து அரசின் நோக்கம் புரிகிறது” என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குக்கி பழங்குடியினரின் மாணவர் அமைப்பான குக்கி சத்ரா சங்கதனா, மணிப்பூரின் பல்வேறு எதிர்க்கட்சிகள் ஆகியவை தொடர்ந்து வலியுறுத்தியது மட்டுமின்றி “மணிப்பூர் அரசு மீது, மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்” என்று கரம் ஷியாம்சிங், ராதே ஷியாம்சிங், நிஷிகாந்த் சிங் உள்ளிட்ட 8 பா.ஜ.க எம்.எல். ஏக்கள் கடிதம் எழுதிய பிறகும் மணிப்பூர் கலவரம் குறித்து வாய் திறக்காத பிரதமர் மோடி இது குறித்த கவலை சிறிதுமின்றி அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் சென்று விட்டார். அங்கு அமெரிக்க அதிபருக்கு உபநிஷத நூலும், சந்தனப் பெட்டியும், அவரது மனைவிக்கு வைரக்கல்லும் பரிசளித்து வெள்ளை மாளிகை விருந்துண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே சட்டீஸ்கர், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் பழங்குடியினர் நிலங்களை அதானி உள்ளிட்ட பெரு முதலாளிகளுக்குத் தாரைவார்த்த மோடி அரசு மணிப்பூரில் பழங்குடியினர் நிலங்களை உயர்ஜாதியான மெய்தேய் மக்கள் ஆக்கிரமிக்க வசதியாக அவர்களுக்குப் பழங்குடியினர் அந்தஸ்து அளித்துள்ளது.

“அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை”என்ற பெரும்புலவர் திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப ஒன்றியத்தை ஆளும் பிரதமர் மோடி அரசும், மணிப்பூரை ஆளும் முதல்வர் பீரேன் சிங் அரசும் விரைவில் தங்கள் அதிகாரத்தை இழக்கும் நிலை வரும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian